## செப்டம்பர் – 02 – சனி

### முதல் வாசகம்: 1 தெசலோனி : 4 : 9–11

சகோதர சகோதரிகளே! சகோதர அன்பைப்பற்றி உங்களுக்கு எழுதவேண்டிய தேவையில்லை. ஏனெனில் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்த, கடவுளிடமிருந்து நீங்களே கற்றுக கொண்டவர்களாய் இருக்கிறீர்கள்.உண்மையிலேயே நீங்கள் மாசிதோனியாவிலுள்ள சகோதரர் சகோதரிகள் அனைவரிடமும் அன்பு செலுத்தி வருகிறீர்கள். அன்பர்களே! இதில் இன்னும் முன்னேற வேண்டுமென்று உங்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டதுபோல, உங்கள் வேலையை மட்டுமே பார்த்துக் கொண்டு, உங்கள் சொந்தக் கையால் உழைத்து அமைதியாய் வாழ்வதில் நோக்கமாயிருங்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவர் உலகுக்கு நீதி வழங்க வருகிறார்

### நற்செய்தி : மத்தேயு 25 : 14 – 30

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது: ”விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சி வாயிலாகவும் விளக்கலாம் நெடும் பயணம் செல்லவிருந்த ஒருவர் தம் பணியாளர்களை அழைத்து அவர்களிடம் தம் உடைமைகளை ஒப்படைத்தார். அவரவர் திறமைக்கு ஏற்ப ஒருவருக்கு ஐந்து தாலந்தும் வேறொருவருக்கு இரண்டு தாலந்தும், இன்னொருவருக்கு ஒரு தாலந்தும் கொடுத்துவிட்டு நெடும் பயணம் மேற்கொண்டார்.ஐந்து தாலந்தைப் பெற்றவர் போய் அவற்றைக் கொண்டு வாணிகம் செய்து வேறு ஐந்து தாலந்து ஈட்டினார்.அவ்வாறே இரண்டு தாலந்து பெற்றவர் மேலும் இரண்டு தாலந்து ஈட்டினார்.ஒரு தாலந்து பெற்றவரோ போய் நிலத்தைத் தோண்டித் தம் தலைவரின் பணத்தைப் புதைத்து வைத்தார்.நெடுங்காலத்திற்குப் பின் அந்தப் பணியாளர்களின் தலைவர் வந்து அவர்களிடம் கணக்குக் கேட்டார்.ஐந்து தாலந்து பெற்றவர் அவரை அணுகி, வேறு ஐந்து தாலந்தைக் கொண்டு வந்து, ”ஐயா, ஐந்து தாலந்தை என்னிடம் ஒப்படைத்தீர் இதோ பாரும், இன்னும் ஐந்து தாலந்தை ஈட்டியுள்ளேன்” என்றார்.அதற்கு அவருடைய தலைவர் அவரிடம், ”நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும்” என்றார்.இரண்டு தாலந்து பெற்றவரும் அவரை அணுகி, ”ஐயா நீர் என்னிடம் இரண்டு தாலந்து ஒப்படைத்தீர். இதோ பாரும்,வேறு இரண்டு தாலந்து ஈட்டியுள்ளேன்” என்றார்.அவருடைய தலைவர் அவரிடம், ”நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்குரியவராய் இருந்தீர். எனவே பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன். உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும்” என்றார்.ஒரு தாலந்தைப் பெற்றுக் கொண்டவரும் அவரையணுகி, ”ஐயா, நீர் கடின உள்ளத்தினர் நீர் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவர் நீர் தூவாத இடத்திலும் விளைச்சலைச் சேகரிப்பவர் என்பதை அறிவேன்.உமக்கு அஞ்சியதால் நான் போய் உம்முடைய தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ, பாரும், உம்முடையது” என்றார்.அதற்கு அவருடைய தலைவர், ”சோம்பேறியே! பொல்லாத பணியாளனே, நான் விதைக்காத இடத்திலும் போய் அறுவடை செய்பவன். நான் தூவாத இடத்திலும் போய் சேகரிப்பவன் என்பது உனக்குத் தெரிந்திருந்தது அல்லவா?அப்படியானால் என் பணத்தை நீ வட்டிக் கடையில் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நான் வரும்போது எனக்கு வரவேண்டியதை வட்டியோடு திரும்பப் பெற்றிருப்பேன்” என்று கூறினார்.”எனவே அந்தத் தாலந்தை அவனிடமிருந்து எடுத்துப் பத்துத் தாலந்து உடையவரிடம் கொடுங்கள்.ஏனெனில் உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும். அவர்கள் நிறைவாகப் பெறுவர். இல்லாதோரிடமிருந்து அவரிடமுள்ளதும் எடுக்கப்படும்.பயனற்ற இந்தப் பணியாளைப் புறம்பேயுள்ள இருளில் தள்ளுங்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்” என்று அவர் கூறினார்.

**தியானம்:** மனித வாழ்க்கை என்பது உண்பதுவும் உறங்குவதும் குடிப்பதுவும் அன்று. மாறாக இறைவனுக்காக பயனள்ள வாழ்வு வாழ்வது. நாமெல்லாம் பலன் தருவதற்காக படைக்கப்பட்டிருக்கின்றோம். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய அது அப்படியே இருக்கும். மடிந்தால் தான் மிகுந்த பலன் தரும். (யோவா.12:24) ஒருவிதை பலன்தர வேண்டுமென்றால் அது வெட்டி கிழிக்கப்பட்ட நிலத்துக்குள் தன்னை புதைத்துக் கொள்ள வேண்டும். அந்த நிலத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு தன்னுடைய உருவை இழக்க வேண்டும். அதன்பின் தனக்குள் இருக்கும் ஆற்றலை உணரும்போது தன்னை மூடி மறைத்த நிலத்தைக் கிழித்துக் கொண்டு மேல்நோக்கி வளர்ந்து முப்பது, அறுபது, நூறு மடங்காக பலன் தந்து தன்னுடைய பிறப்பின் பயனை அது நிறைவேற்ற முடியும். ஒரு சாதாரண விதை அதனுடைய பலனைத் தர வேண்டுமென்றால் மேற்கண்ட வேதியல் மாற்றங்களுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துக் காத்திருக்கின்றது. அதைப்போல ஒரு மனிதன், கடவுள் தன்னுடைய வாழ்க்கையின் வழியாக என்ன செய்ய விரும்புகின்றார்? என் வாழ்வுக்கான கடவுளுடைய திட்டம் என்ன? என்பதைக் கண்டுகொண்டு அதை நிறைவேற்ற வேண்டுமென்றால் அவன் தன் வாழ்க்கையில் வரும் சவால்கள் சோதனைகள் துன்பங்கள் எல்லாம் கடவுள் தன்னைப் பக்குவப்படுத்துவதற்காக கொடுக்கின்றார் என்பதைப் புரிந்து கொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். நமக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்காக சிலநேரங்களில் கடவுள் நம்மை அதிகமாக அழவைக்கின்றார். எனவே மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு கடவுளோடு ஒத்துழைக்கின்றானோ தன்னை கடவுளிடம் ஒப்புக்கொடுக்கின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாக பயன் கொடுப்பவனாக மாறுகின்றான். விதை மண்ணோடு ஒத்துழைத்தால்தான் விளைச்சலை கொடுக்க முடியும். அதைப்போல தூய ஆவியோடு ஒத்துழைக்கின்ற மனிதன்தான் கடவுளுடைய திட்டத்திற்காக பயன்படும் உன்னத பாத்திரமாக உயர்த்தப்படுவான். தன்னைத்தானே சுமந்து கொண்டு அலைகின்ற மனிதன் ஒன்றுக்கும் உதவமாட்டான். சுய நலவாதிகள், தற்பெருமை கொள்வோர் கடவுளுக்கு அருவருப்பானவர்கள்.